# வணக்கம்

சுமார் முப்பதாண்டுகளாக பத்திரிகைத் துறையில் செயல்பட்டுவரும் என்னைத் தன் பத்திரிகையில் தனிப் பத்தி எழுத அழைத்த பத்திரிகை ஆசிரியர்கள் இரண்டே பேர்தான் (நான் பொறுப்பாசிரியராக இருந்த பத்திரிகைகளில் தனிப்பத்தி எழுத எனக்கு நானே வாய்ப்பு கொடுத்துக் கொண்டது தனி.

1979-80ல் விசிட்டர் அனந்த் அளித்த வாய்ப்பில் அவரது விசிட்டர், விசிட்டர் லென்ஸ் இதழ்களில் 'திண்ணை', 'திக்கு தெரியாத நாட்டில்' என்ற பொதுத் தலைப்பில் காலம்களை எழுதினேன். அதன் பிறகு 23 ஆண்டுகள் கழித்து தமிழ் இந்தியா டுடே இதழின் இணையாசிரியர் ஆனந்த் நடராஜன் அழைப்பில் கண்டதைச் சொல்லுகிறேன்' பத்தியை இரண்டு ஆண்டுகளாக எழுதி வருகிறேன்.

பத்திரிகைகளில் தொடர் கதைகள், தொடர் கவிதைகள், தொடர்கட்டுரைகள் எழுதலாம். ஆனால் தனிப் பத்தி எழுதுவது என்பது பொதுவாக உயர்ந்த கௌரவமாகக் கருதப்படுகிறது. தனிப் பத்தி என்பது கருத்து சொல்வதற்கான அதிக பட்ச சுதந்திரத்தை எழுதுபவருக்கு பத்திரிகை அளிப்பதாகும். ஆங்கில பத்திரிகைகளில் இவ்வாறு தனிப் பத்தி எழுத அழைக்கப்படும் புகழ் பெற்ற பத்திரிகையாளர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். தமிழில் மிகக் குறைவு. ஆங்கிலத்தில் இப்படி தனிப் பத்தி எழுதுபவர்களில் பலர் ஒரே கட்டுரையை வெவ்வேறு மாநிலங்களில் வெளியாகும் வெவ்வேறு பத்திரிகைகளுக்கு அளித்து அதிக பணம் ஈட்டும் வாய்ப்பு இருக்கிறது. குஷ்வந்த் சிங், குல்தீப் நய்யார், கே.ஆர், சுந்தரராஜன், மறைந்த திரேள் பகத், நிக்கில் சக்ரவர்த்தி போன்றோர் இப்படி சிண்டிகேட்டட் காலம் எழுதுவதில் புகழ் பெற்றவர்கள். தமிழில் இத்தகைய வாய்ப்புகளுக்கு வாய்ப்பே இல்லை.

கண்டதைச் சொல்லுகிறேன் என்ற தலைப்பு 'சில நேரங்களில் சில மனிதர்கள், திரைப்படத்தில் இடம் பெற்ற எழுத்தாளர் ஜெயகாந்தனின் பிரபலமான பாடலின் முதல் வரி. சென்னை நிருபர்கள் சங்கத்தின் இதழான நியூஸ்மன் பத்திரிகையில் 1978-79ல் முதல்முறை இந்தத் தலைப்பில் தனிப் பத்தியை வம்பன் என்ற புனைப்பெயரில் எழுதினேன். அந்தப் பத்தி பத்திரிகைத் துறைக்குள் நடக்கும் சீர்கேடுகளைப் பற்றி விவாதத்தை கிளப்புவதற்காக எழுதப்பட்டதாகும்.

இந்தியா டுடே இதழில் பொது அக்கறைக்குரியதாக நான் கருதும் எந்த விஷயத்தைப் பற்றி வேண்டுமானாலும் எழுதலாம் என்று ஆனந்த் நடராஜனும் உதவி ஆசிரியர் சதாசிவமும் எனக்குச் சொன்னார்கள். அந்த வசதியைப் பயன்படுத்தி விபசாரம், ஆன்மீகம், அரசியல், மதம், கல்வி,

மீடியா, குழந்தைகள், குடும்பங்கள் என்று வகை வகையான விஷயங்கள் பற்றி என்னுடைய பார்வையை வாசகர்களுடன் பகிர்ந்து வந்திருக்கிறேன். கட்டுரைகளுக்கேற்ற கூர்மையான ஓவியங்களை வரைந்தவர் நர்சிம். அவருக்கும் இதர ஓவியர்கள் அமர்நாத், சத்தியேந்திரன், பிளாட்சோ அகியோருக்கும் நன்றி.

இந்தப் பத்தியை பல வாசகர்கள் கூர்மையாக கவனித்து வருகிறார்கள் என்பதை உணர்த்தும் பல தொலைபேசிகள், சந்திப்புகள் நிகழ்ந்தன. குறிப்பிட வேண்டியது எழும்பூரிலிருந்து திருச்சி செல்லும் ஒரு ரயில் பெட்டியில் தாம்பரத்தில் ஒரு வாசகர் தன்னை அறிமுகப்படுத்திப் பேசிக்கொண்டிருந்தபோது தற்செயலாக அதே பெட்டியில் ஏறிய சதாசிவமும் அந்த உரையாடலில் கலந்துகொண்டு ஆச்சரியமடைந்ததாகும். பண வசதியும் சமூக அந்தஸ்தும் உள்ளவர்கள் முதல் மிகச் சாதாரண வாழ்க்கையில் இருக்கும் எளிய மனிதர்கள் வரை இந்தப் பத்திக்கு(ம் இந்தியா டுடேவுக்கும்) வாசகர்களாக இருப்பது இங்கு குறிக்கத்தக்கது.

ஜனவரி 2003ல் என் 50 வயது நிறைவடைந்தபோது, அடுத்த ஓராண்டுக்குள் 50 நூல்களாவது வெளியிடவேண்டும் என்ற என் விருப்பத்தை தினமணி செய்தியாக வெளியிட்டது. ஆனால் ஓராண்டில் 14 தீம்தரிகிட இதழ்களையும், இரண்டு சிறு பிரசுரங்களையும் இந்த நூல் உட்பட இரு பெரிய நூல்களையும் மட்டுமே வெளியிட முடிந்தது. 50 நூல்களுக்கு சமமான 'அய்யா' தொலைக்காட்சித் தொடரை தயாரிக்க முடிந்தது. நூல்கள் வெளியிட முடியாமல் போனதற்குக் காரணங்கள் பல. வெளியிடுவதற்கு என் 25 வருட கட்டுரைத் தொகுப்புகள், சிறுகதைத் தொகுப்பு, நாடகங்கள் என்று 50க்கும் மேற்பட்டவை இருந்தாலும் அவற்றை நானே வெளியிடும் பண வசதி இல்லை. என் நூல்களை பணம் செலவழித்து வெளியிடத் துணியும் பதிப்பாளர்கள் இல்லை.

இந்த நூலை வெளியிடும் நண்பர் பாலமுருகன் இதன் மூலம் பதிப்பாளராகத் தொழிலைத் தொடங்குகிறார். இது எனக்கு பெருமகிழ்ச்சியைத் தருகிறது. நண்பர் எழுத்தாளர் பாஸ்கர் சக்தி மூலம் எனக்கு அறிமுகமான பாலா, 2002ல் தீம்தரிகிட இதழை நான் தொடங்கியபோது ஒவ்வொரு மாதமும் தயாரிப்பில் எனக்கு உதவி செய்வதற்காக தேனியிலிருந்து சென்னை வந்து சென்று. கொண்டிருந்தவர் பிறகு சென்னையிலேயே தங்கி பத்திரிகை, நாடகம், வீடியோ என்று பல துறைகளிலும் பணியாற்றுபவராகி விட்டார்.

பத்திரிகை, பதிப்புத் துறைகளில் தீவிர அக்கறையுடைய அடுத்த தலைமுறை இளைஞர்களான ஆனந்த் நடராஜன், சதாசிவம், பாலமுருகன் ஆகியோருடன் எனக்குள்ள உறவின்அடையாளமாக இந்த நூல் திகழ்வது எனக்கு மகிழ்ச்சி தருகிறது.

*சுநாமியில் தப்பித்த*
*வீட்டிலிருந்து*
*திருவான்மியூர் டிசம்பர் 2004*

**ஞாநி**